International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்ககாலச் சமூகத்தில் பெண் இருத்தலியல்

**முனைவர் கு. சிவப்பிரகாசம்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி
தருமபுரி – 636705

**அறிமுகம்**

உலக உயிர்களில் பெண்ணினம் உயிரத்தோன்றலின் அடிப்படையாக இருந்து வருகின்றது. இது இயற்கையின் தேவையைத் தீர்மானிக்கிறது. பரிணாம வளர்ச்சியின் கடைசியாக இருக்கும் மனிதனிடத்தில் பெண்ணினம் பேதமையின் அடையாளமாகவும், உடைமையின் குறியீடாகவும் காட்டப்படுகிறது. தாய்வழிச் சமூகமாக தொடங்கிய இவ்வுயிரியற்கை பின்னாளில் அதிகாரத்தின் ஊடாக ஆண் இனத்தை முன்னிறுத்தியது. அதனால் பெண் பின்னுக்குத் தள்ளப்பட்டாள். பின்னாளில் அவளின் கருத்திற்கு மதிப்பளித்து பெண் இருத்தலை உறுதிபடுத்த சமூக அமைப்புகள் போராடி வெற்றியும் பெற்றிருக்கின்றன. இவை அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியில் சாத்தியப்படும்போது சங்க சமூகம் பேணிவந்த பெண் இருத்தலை கருப்பொருளாகக் இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**நோக்கம்**

சமகாலத்தில் பெண்ணிய வாழ்வியல்முறை வளர்ச்சி பெற்றிருக்கும் சூழலில், பெண் இருத்தியலை சங்க இலக்கியங்கள் எவ்வாறு பதிவு செய்திருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகிறது.

**கருதுகோள்**

சங்ககாலச் சமூகத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியங்களின் வழியாக பெண் வாழ்வியல் என்பது சமூக அமைப்பின் மையமாகவும், வீரத்தின் அடையாளமாகவும், இருந்து பாலினச் சமத்துவத்தை ஏற்று பெண் இருத்தலியலை உறுதிபடுத்தியிருக்கின்றது என்ற கருதுகோளின் அடிப்படையில் இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

**சமகாலப் பெண்ணியம்**

பெண் வாழ்நிலைக் குறித்துப் பேசும்போது அவளுக்கெதிரான வன்முறைகளும், குற்றங்களும் அவளின் கருத்து, உரிமை வேட்கையும், பாலினச் சமத்துவமும் முதன்மைப் பெறுகின்றன. பெண் இருத்தலை உருவாக்கிய விதம் நெடிய போராட்டங்களுக்குரியன என்பதை இச்சமூகம் அறியும்

**பெண்ணியம்**

Feminism என்னும் ஆங்கிலச் சொல் Femina என்னும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்நிலை ஏற்பு, மகளிரியல், பெண்நலக் கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது. இவற்றுள் பெண்ணியம் என்பது பொருத்தமாகவும் சிறப்பாகவும் இருப்பதால் இதுவே நிலைபெற்றது.

**பெண்ணியக் கவிதைகள்**

“மாதர் தம்மை இழிவு செய்யும்

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

**மடைமையைக் கொளுத்துவோம்"** - பாரதி

**மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல**

**மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!** - கவிமணி

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்,**

**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்,**

**எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்,**

**இளைப்பில்லை காணென்று கும்மியடி..."** - பாரதி இப்படி பதிவு செய்துள்ளார்கள்.

**சங்ககாலச் சமூகப் பெண்கள்**

பண்டையக் காலம் என்று அறியப்படுகின்ற சங்ககாலச் சமூகத்தில் பெண்களின் வாழ்வியல் இரண்டு நிலைகளில் பதிவுச் செய்யப் பட்டுள்ளன. முதலாவதாக, சங்க இலக்கியங் களில் ஆண்களால் படைக்கப்பட்டப் பெண்கள் **(பொது எழுத்து) என்றும்**, இரண்டாவதாக சங்க இலக்கியங்களைப் படைத்தப் பெண்களால் படைக்கப்பட்டப் பெண்கள் **(பெண் எழுத்து)** என்றும் வகைப்படுத்தலாம்.

**பொது எழுத்து**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று அறியப் படுகின்ற சங்க இலக்கியங்களில் படைக்கப் பட்டிருக்கும் பெண்கள் ஆணைப் பின்தொடர்பவ ளாகவும், ஆண் இனத்தை நம்பி வாழ்பவளாகவும் குடும்ப அமைப்பின் மையமாகவும் படைக்கப் பட்டிருக்கின்றாள்.

**குறிஞ்சிப்பாட்டு**

உணவு உண்ணாமலும், விளையாட்டில் நாட்டமில்லாமலும், உறக்கம் இல்லாமலும் தவித்துக் கொண்டிருக்கும் பெண்ணிற்கு யார் யாரோ சொல்லக்கேட்டு பல மருத்துவங்களைச் செய்தும், கோயில்கள் சென்றும் தீர்க்கமுடியாத நோயைத் தோழியின் வழியாக உண்மை அறிந்த செவிலி உரிய தலைவனைக் கண்டுபிக்கும் நிகழ்வுதான் குறிஞ்சிப்பாட்டு. அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் தலைவியின் காதலைத் தோழி செவிலிக்குச் சொல்வதாய் அமைந்த கூற்றுநிலைப் பாடலாகும். இங்கு நடந்ததைக் கேட்பவள் செவிலி, நடந்ததைச் சொல்பவள் தோழி, நடந்தது தலைவிக்கு என்னும் நிலையில் பெண்களுக்குள் நடக்கும் பெண் வாழ்வியலை மையப்படுத்துகிறது.

காவலர் கடுகினும், கதநாய் குரைப்பினும் நீ துயில் எழினும், நிலவு வெளிப்படினும், வேய்புரை மென் தோள் இன்துயில் பெறாஅன், பெயரினும், முனியல் உறாஅன்,

இளமையின் இகந்தன்றும் இலனே, வளமையின் தன் நிலை தீர்ந்தன்றும் இலனே கொன் ஊர் மாய வரவின் இயல்பு நினைஇத் தேற்றி, நீர் எறி மலரின் சாஅய், இதழ் சோரா, ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண் ஆகத்து அரிப்பனி உறைப்ப, நாளும் வலைப்படு மஞ்ஞையின் நலம்செலச் சாஅய் நினைத்தொறும் கலுழுமால் இவளே கங்குல்

**முல்லைப்பாட்டு**

கார்காலத்தில் வருவேன் என்று சொல்லி போருக்குச் சென்ற தலைவன், கார்காலம் வந்தும் அவன் வரவில்லையே என்னும் ஏக்கம் நிறைந்தத் தலைவி, ஏக்கத்தைப் போக்கும் முதுமக்கள், தலைவியை ஆறுதல்படுத்தும் தோழி என அனைத்தும் பெண் பாத்திரங்க ளையே மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது முல்லைப்பாட்டு இலக்கியம். முல்லைத் திணையின் உரிப்பொருளான காத்திருத்தலை அடைப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட முல்லைப்பாட்டு முற்றிலும் தலைவியின் ஏக்கத்தையும் தலைவனின் வீரத்தையும் கொண்டு உருவாக்கப்பட்ட பத்துப்பாட்டு நூலாகும்.

நெஞ்சை ஆற்றுப்படுத்த, நிறைதபு புலம்பொடு, நீடு நினைந்து, தேற்றியும், ஓடு வளை திருத்தியும், மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும், ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி, இழை நெகிழ்ந்து, பாவை விளக்கில் பரூஉச் சுடர் அழல இடம் சிறந்து உயரிய எழு நிலை மாடத்து, முடங்கு இறைச் சொரிதரும் மாத் திரள் அருவி இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்

**பட்டினப்பாலை**

காவிரிநதி பாயக்கூடிய சோழவளநாடு, வேளாண்மை செழிப்பு, கட்டடக் கலை, அரண்மனை சிறப்பு, நவரத்தினங்களின் வணிகம் போன்ற பல பெருமைகள் இருப்பினும் நெஞ்சமே என் தலைவியை விட்டு என்னால் வரமுடியாது என்று தன் நெஞ்சிக்குச் சொல்லும் தலைவனின் கூற்றாக அமைந்தது பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டு நூல்.

**முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**

**வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய**
**வாரேன் ,வாழிய நெஞ்சே** – பட்டினப்பாலை

**குறுந்தொகை**

உடன்போக்கு மேற்கொண்டு உணவு தயார் செய்யும் தலைவி, குழம்பு வைக்கும்போது தன்னுடைய மெல்லிய விரலால் தயிர்பிசைந்து அதே கையால் நழுவிய ஆடையை சரிசெய்து, அடுப்பில் வரும் புகையால் கண்ணை சரி செய்துக் கொண்டு உருவாக்கிய குழம்பை இனிதாக இருப்பதாக கணவன் உண்டு மகிழ்ந்து தலைவியின் நம்பிக்கையைப் பெற்றான் என்று குறுந்தொகை கூறுகிறது. .

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**

**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ,**

**குவளை உன்கண் குய்ப்புகை கமழக்**

**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**

**இனிதெனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதன் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்**

**முகனே"** (குறுந் -167)

என் தலைவனை விட்டு என்னால பிரியவே முடியாது. "முன்னோர்கள் சம்பாதித்தப் பொருளைக் கொண்டு வாழவேண்டும் என்று நினைப்பவன் செத்துப் போனதற்கு சமம் என்றும், பொருள் இல்லாமல் வாழ்வது இரத்தலைவிட இழிவானது என்றும் என்னை விட்டு பிரிவதற்கு தலைவன் சொன்ன காரணம் எனக்கு மிகவும் பிடித்தது. எனக்காக காடு, மலை, கொடிய மிருகங்கள் வாழுமிடம், வழிப்பறிக் கொள்ளையர்கள் வாழுமிடம் ஆகியவற்றைக் கடந்துச் சென்றவன் இன்னும் வரவில்லையே என்று தலைவனுக்காக ஏங்கும் பெண் இங்கு படைக்கப்பட்டிருக்கின்றாள்.

**உள்ளது சிதைப்போர்' உளர் எனப்படாஅர்;**

**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு' எனச்**

**சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்**

**பாலை பாடிய பெருங்கடுங்கோ,**

குறுந். 283

**ஐங்குறுநூறு**

நான் உடன்போக்கு மேற்கொண்டு தலைவனின் ஊருக்குச் சென்றேன். அங்கே சிறிய குழியில் இருந்த நீரை மான் குடித்தது. அதில் மீதி இருந்த கலங்கிய நீரை நான் குடித்தேன். அது, நீ எனக்குத் தேனுடன் பால்கலந்து தந்தாயே அதனினும் சிறப்பாக இருந்தது என்று தலைவனின் ஊர்ப் பெருமையைப் பறைசாற்று கின்ற பெண்ணாக இருந்துள்ளாள் என்பதை அறிய முடிகிறது.

**அன்னாய் வாழி வேண்டு அன்னை நம்**
**படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலை கூவல் கீழ**
**மான் உண்டு எஞ்சிய கழிலிநீரே** - ஐங்குறு. 203

**நற்றிணை**

ஆவலோடு தன்னைக் கட்டியணைக்க வரும் தன் தலைவனை என் தமக்கை இருக்கின்றாள் என்று புன்னை மரத்தைக் காட்டி தன் காதலைத் தவிர்த்த சூழலியல் பெண்ணாக நற்றிணை பகிர்கின்றது.

**விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,**

**மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,**

**'நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப;**

**நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்' என்று,**

**அன்னை கூறினள், புன்னையது நலனே**

நற்றிணை 172 பெயர் தெரியவில்லை

இப்படி சங்க இலக்கியங்களில் படைக்கப் பட்டிருக்கும் பெண்கள் தலைவனின் மையமாகவே இருந்திருக்கின்றாள் என்பதைக் காண முடிகின்றது.

**பெண் எழுத்து**

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்குமுன் தமிழ்ச்சமூகம் பாலினச் சமத்துவத்தோடு வாழ்ந்தார்கள் என்பதற்குச் சங்ககாலத்துப் பெண்பாற் புலவர்கள் சாட்சியாவர். முறையே **ஔவையார், அஞ்சில் அஞ்சியார், அஞ்சியத்தை மகள் நாகையார், அள்ளூர் நன்முல்லையார், அணிலாடு முன்றிலார், ஆதிமந்தி, ஒக்கூர் மாசாத்தியார், ஓரிற் பிச்சையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், கழார்க்கீரன் எயிற்றியார், காக்கைப்பாடினி நச்செள்ளையார், காவற்பெண்டு, காமக்கணி நப்பசலையார், குமுழி ஞாழல் நப்பசையார், குறமகள் இளவெயினியார், குறமகள் குறிஎயினி, தாயங்கண்ணியார், நக்கண்ணையார், நல்வெள்ளியார், பாரிமகளிர், பூங்கனுத்திரையார், பெருங்கோப்பெண்டு, இளவெயினி, பொன்முடியார், பொதும்பில், புல்லளங்கண்ணியார், மாற்பத்தி, மாறோகத்து நப்பசலையார், முடத்தாமக் கண்ணியார், முள்ளியூர் பூதியார், வெள்ளி வீதியார், வெண்ணிக் குயத்தியார், மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளையார்** போன்ற முப்பதிற்கும் மேற்பட்ட பெண்புலவர்கள் இருந்தமை உலக வரலாற்றில் வேறு எந்த இலக்கியங்களிலும் இருந்ததில்லை.

**நாணத்தைவிட வீரமே பெரிது**

மெதுவாக நாணத்துடன் தன் தலைவனைப் பார்க்க வந்தத் தலைவிக்கு தலைவனின் தாய் சொல்லும் பதில் பெண்ணின் வீரத்தைப் பறைசாற்றுகின்றது. "உன் மகன் எங்கு இருக்கிறான்" என வினவுகிறாய். அவன் எங்கு இருக்கிறானோ எனக்குத் தெரியாது. புலி வெளியேறியுள்ள கல்லுக்குகைபோல அவனைப் பெற்றெடுத்த வயிறுதான் இது. அவன் தானாகவே போர்க்களத்தில் தோன்றுவான் என்று தாய் சொல்வது ஆண் வீரத்திற்கு பின்னால் பெண் இருக்கின்றாள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

**புலி சேர்ந்து போகிய கல்அளை போல,**

**ஈன்ற வயிறோ இதுவே;**

**தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே!**

**காவற்பெண்டு,** புறநானூறு 86

**பெண் வீரம் வயதைக் கடந்தது**

எல்லோரும் போருக்குச் சென்று திரும்பி வருகின்றார்கள், போருக்குச் சென்ற என்மகன் மட்டும் இன்னும் வரவில்லையே என்று ஒரு தாய் கேட்க, எதிரில் வந்தவனில் ஒருவன் உன்மகன் புறமுதுகிட்டு இறந்துபட்டான் என்னும் செய்தியைக் கேட்டு, இது உண்மையானால் கோழைக்குப் பால்கொடுத்த என் மார்பை அறுத்தெறிவேன் என்று போர்க்களம் சென்று பார்க்கின்றாள் தாய். குவிந்துகிடக்கும் பிணங்களைப் புரட்டிப் பார்த்தவளுக்குத் தன் மகனை அடையாளம் கண்டாள், மகன் புறமுதுகிட்டு சாகவில்லை, மாறாக மார்பில் அம்புபட்டு இறந்திருக்கிறான். என் மகனைப் புறமுதுகிட்டு இறந்தான் என்று சொன்னவனின்

நாக்கை அறுப்பேன் என்று சூழுரைத்தது மட்டுமல்லாமல், வீரனாக இறந்து கிடக்கும் மகனைப் பார்த்தத் தாய், "ஈன்ற பொழுதினும் பெரிதுவத்தாள் என்னும் உயர் நெறிதான் வீரத்தாயின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

படை அழிந்து மாறினன் என்று பலர் கூற,
மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என்
**முலை அறுத்திடுவென் யான் எனச் சினைஇக்**
**கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்**
**செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய**
**படுமகன் கிடக்கை காணூஉ,**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே.**

**காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்,**
புறநானூறு 278

**வீரம் என்பது வெறியல்ல**

முன்பொருநாள் தன் தகப்பன் போரில் மடிந்தான், நேற்று தன் தலைவன் போரில் மடிந்தான், இன்று போர்ப்பறை கேட்கிறது. போரில் விருப்பமுற்ற தாயொருத்தி, போரென்றால் என்னவென்றே தெரியாத வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை அழைத்து, போருக்குச் செல்வதைப் போல அலங்கரித்து போர்க்களம் சென்று வா.. என்று அனுப்பும் மனநிலை ஆபத்தானது என்று புறநானூறு பதிவு செய்துள்ளது.

**இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று, மயங்கி**

**வேல் கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப**

**பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி**

**ஒரு மகன் அல்லது இல்லோள்**

**செருமுக நோக்கிச் செல்க, என விடுமே.**

ஒக்கூர் மாசாத்தியார், புறநானூறு 279

**பெண் சிந்தித்தப் போர்நிறுத்தம்**

உலகம் முழுக்க போர் நடைபெறுகின்றது. போர் நடைபெறுமானால் அங்கே உயிர்பலி இருக்கும், இரத்தச் சாட்சி இருக்கும், உடல் ஊனப்படும், இவையெல்லாம் வேண்டாமென்று நினைத்தால் போர் நிறுத்தம் ஒன்றே தீர்வு. இரண்டு மன்னர்களுக்கிடையேயும் நடக்கவிருந்தப் போரைத் தன் மதிநுட்பத்தால் தடுத்ததின் வழியாக ஒரு பெண்பாற் புலவர் சமாதானத்தை உருவாக்குகிறார். சண்டையிடுவது ஒரு மன்னனின் கடமையென்றால், சண்டையைத் தவிர்த்து மனித உயிர்களைக் காக்கும் பொறுப்பும் மன்னனுக்கு உண்டு. இதை உணர்ந்து போரைத் தடுத்து நிறுத்தியப் பெருமை ஔவையையேச் சாரும். இரண்டு மன்னர்களுக் கிடையே நடக்கவிருந்த போரைத் தடுத்து நிறுத்திய ஒரு பெண்ணின் செயல் உலக இலக்கிய வரலாற்றிலேயே தமிழ்ச் சமூகத்தில் தான் நிகழ்ந்திருக்கிறது.

**இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக்**

**கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து,**

**கடியுடை வியன்நக ரவ்வே : அவ்வே,**

**பகைவர்க் குத்திக், கோடுநுதி சிதைந்து,**

**கொல்துறைக் குற்றில மாதோ**

ஔவையார், புறநானூறு 95

**முடிவுரை**

பெண் ஆணுக்கு நிகரானவள் என்பதற்கு தற்காலத்தில் நடத்தி வெற்றிபெற்றிருக்கும் பெண்ணியச் சிந்தனைகள் பெண்ணிய இருத்தலை உறுதிபடுத்துவதைப் போலவே, சங்ககாலப் பெண்கள் குடும்ப, சமூக அமைப்பு களில் மையமாக இருந்து செயல்பட்டிருக்கிறார் கள் என்பதை சங்ககாலப் பெண் படைப்பாளர் களின் எழுத்துக்களில் காணமுடிகின்றது. பொது சமூகத்தைப் போலவே பெண் குடும்பத்தின் மையமாகவும், வீரத்தின் அடையாளமாகவும் திகழ்ந்திருக்கிறாள் என்பதின் வழியாக சங்ககாலச் சமூகத்தில் பெண் இருத்தல் நிலைபேறு உடையது என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் வழியாக அறிய முடிகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

1. முல்லைப்பாட்டு - முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்(உ.ஆ), சங்க இலக்கியம் மூலமும் உரையும், 41-பி, சிட்கோ இண்டஸ் ரீயல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை – 600098
2. குறிஞ்சிப்பாட்டு - முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்(உ.ஆ), சங்க இலக்கியம் மூலமும் உரையும், 41-பி, சிட்கோ இண்டஸ் ரீயல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை – 600098
3. பட்டினப்பாலை - முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்(உ.ஆ), சங்க இலக்கியம் மூலமும் உரையும், 41-பி, சிட்கோ இண்டஸ் ரீயல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை – 600098
4. குறுந்தொகை - முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), சங்க இலக்கியம் மூலமும் உரையும், 41-பி, சிட்கோ இண்டஸ் ரீயல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை – 600098
5. ஐங்குறுநூறு - முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), சங்க இலக்கியம் மூலமும் உரையும், 41-பி, சிட்கோ இண்டஸ் ரீயல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை – 600098
6. புறநானூறு - முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), சங்க இலக்கியம் மூலமும் உரையும், 41-பி, சிட்கோ இண்டஸ் ரீயல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை – 600098